நாள் -05.03.2020

இ.எ. எண்.1/2019 இன் இ.பி.எண்.2/2018 இன் அ.வ.எண்.8/2011

எ.மா.சா. 1 ( சந்திரசேகரன்) அழைக்கப்பட்டு மனுதாரர் தரப்பு கு.வி

இந்த வழக்கில் எத்தனை பட்டிகை சொத்து உண்டு என்றால் 4 பட்டிகை சொத்துகள் இருப்பதாக நியாபகம். சாட்சி தற்போது தனக்கு சரியாக நியாபகம் இல்லை என்று மாற்றி சாட்சியம் அளிக்கிறார்.இந்த வழக்கில் பி பட்டிகை சொத்து உண்டு என்றால் சரிதான். பி பட்டிகை சொத்தின் மொத்த விஸ்தீரணம் 2.530 சென்ட் என்றால் எனக்கு சரியாக நியாபகம் இல்லை. எ பட்டிகை சொத்து நான் விலை வாங்கியது என்றால் சரிதான். எ பட்டிகை சொத்தில் நான் முழுஉரிமையாளர் என்றாலும் , பி பட்டிகை சொத்தில் 0.695 சதுர லிங்ச் தான் எனக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 0.695 சதுர லிங்சு நிலமானது எந்த திசையில் வரும் என்றால் எனது வீட்டிற்கு கிழக்கு புறமாக அமைந்துள்ளது. மொத்த சொத்தில 0.695 சதுர லிங்ச் சொத்தானது மேற்கு பக்கத்தில் அமைந்துள்ளது. பி பட்டிகை சொத்திற்கு மேற்கு பக்கமாக 0.695 சென்ட் அமைந்துள்ளது. மேற்படி 0/695 சதுர லிங்ச் சொத்தானது எ பட்டிகை சொத்தின் கிழக்காகவும் , பி பட்டிகை சொத்திற்கு மேற்காகவும் அமைந்துள்ளது என்றால் சரிதான். நான் விலை வாங்கிய 0.695 சதுர லிங்சு சொத்தில் பாதை அனுபவிக்கும் அவகாசம் மட்டும் தான் உள்ளது என்றால் சரிதான். என் சொத்தின் முன் ஜென்மி நாராயண நாயர் என்றால் சரிதான். அவருக்கு உரிமைப்பட்டது மொத்த விஸ்தீரணம் 61 சென்ட் சொத்து என்றால் எனக்கு தெரியாது. மேற்படி 61 சென்ட் நிலத்தினையும் அவர் பிளாட் போட்டுள்ளார் என்றால் பிரித்து பிரித்து விற்பனை செய்துள்ளார். எத்தனை பிரிவுகளாக பிரித்துள்ளார் என்றால் 4 பிளாட்டுகளாக பிரித்துள்ளார். மேற்படி 4 பிளாட்டுகளுக்கும் போய்வர பாதையாக உபயோகப்படுத்த வேண்டும் என்று 2.53 சென்ட் பாதை விட்டுள்ளார் என்றால் தற்போது நான்கு பிளாட்டுகளுக்கும் உரிமையானவர்கள் அந்த

2.53 சென்ட் பாதையைதான் பயன்படுத்திவருகிறார்கள். பாதையின் சர்வே எண்761ல் 2 ஏ என்றால் சரிதான். சர்வே எண்761/2எயில் மொத்தம் 61 சென்டு சொத்தில் நான் வாங்கியிருப்பது 7.81 சென்ட் சொத்து என்றால் சரிதான் நான் வாங்கவில்லை என் அம்மா வாங்கினார். 7.81 சென்ட் சொத்து தவிர மற்ற சொத்துகளை வேறு நபர்கள் விலை வாங்கி அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். என்னை தவிர மற்ற நபர்களுக்கும் 2.53 சென்ட் பாதையில் அதிகாரம் உண்டு என்றால் அதிகாரம் உண்டா இல்லை என்று கிடையாது. நான் கூறும் 0.695 சதுர லிங்சு பாதையானது பி பட்டிகை சொத்தின் வடமேற்கு மூலையில் தான் வரும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிறைவேற்று மனுவில் என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் பாதையில் கொட்டியுள்ள கற்கள் மற்றும் மண்ணை நீக்கம் செய்யகோரி இந்த நிறைவேற்று மனுவை தாக்கல் செய்தேன். பி பட்டிகை சொத்தின் தெற்கு எல்லையில் உள்ள கற்கள் மற்றும் மண்ணை நீக்குவதற்காக தான் இந்த நிறைவேற்று மனுவை தாக்கல் செய்தேன் என்றால் முதலில் பி பட்டிகை சொத்தின் தெற்கு எல்லையில் மட்டும் தான் கற்கள் மற்றும் மண்கள் போடப்பட்டிருந்தது பின்னர் முழுபகுதியிலும் கற்கள் மற்றும் மண் போடப்பட்டுள்ளது. பி பட்டிகை சொத்திற்கு தெற்கு எல்கையில் உள்ள சொத்து எனக்கு அபகாசப்பட்டது அல்ல என்றால் சரியல்ல அது பொதுவான பாதையாகும். என்னுடை வழக்குரையில் பி பட்டகை சொத்தின் தெற்கு எல்லையில் எந்தெந்த இடங்களில் கற்கள் மற்றும் மண் போடப்பட்டுள்ளது என்று குறிப்பிடடு கூறியுள்ளேனாஎ ன்றால் குறிப்பிட்டு கூறியுள்ளேன். கல் மற்றும் மண் எத்தனை அடி நீளம் மற்றும் உயரத்திற்கு, எத்தனை கற்கள் போடப்படடுள்ளது என்று குறிப்பட்டுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். 3 1/2 அளவிற்கு கற்கள் மற்றும் மண் போடப்பட்டுள்ளது. மணல் எத்தனை அடி அடிக்கு போடப்படடுள்ளது என்று தனியாக குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் மணல் மற்றும் கற்கள் கலந்து தான் போடப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்தள்ள நிறைவேற்று மனு மற்றும் தாக்கல் செய்துள்ள சத்தியபிரமாண வாக்குமூலம் 2லும் மேற்கூறிய விபரம் கூறப்பட்டுள்ளதா என்றால் கூறப்பட்டுள்ளது. அதனை நிரூபிக்கும் வகையில் நான்

புகைப்படம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். சாட்சி புகைப்படத்தினை பார்வையிட்டு என்னுடைய வீட்டின் வாசலை மறைக்கும் அளவிற்கு கற்கள் மற்றும் மண் கொட்டப்பட்டுள்ளது என்று சாட்சியம் அளிக்கிறார். மேற்படி புகைப்படமானது எப்போது எடுக்கப்பட்டது என்றால் 3, 4 மாதங்களுக்கு முன்னர் எடுக்கப்பட்டதாகும். அது எ.ம.சா.ஆ-7 ஆக முன்னரே குறியீடு செய்யப்பட்டுள்ளது. கல், மண் கொட்டப்பட்டுள்ள பகுதி எந்த பக்கம்உ ள்ளது என்றால் கதவிற்கு கிழக்கு பக்கம் அமைந்துள்ளது. நான் தாக்கல் செய்துள்ள புகைப்படங்களை நிரூபிக்க வழக்கறிஞர் ஆணையர் நியமிக்க வழக்கில் கோரவில்லை என்றால் ஏற்கனவே அசல் வழக்கில் வழக்கறிஞர் ஆணையர் நியமிக்கப்பட்டுள்ளார். எ.ம.சா.ஆ-7 ஆவணங்களை அசல் வழக்கின் போது தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் அது தற்போது எடுத்த புகைப்படங்களாகும். எ.ம..சா.ஆ-7 புகைப்படங்ளை வழகசு சொத்தில் தான் எடுக்கப்பட்டது என்பதினை நிரூபிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ- 1 ஆக குறியீடு செய்யப்பட்ட புகைப்படங்கள் மனுதபசில் பாதையை காட்டும் புகைப்படங்கள் என்றால் சரிதான். ம.சா.ஆ-1ல் உள்ள புகைப்படத்திலும் 3 1/2 உயரத்திற்கு கற்கள் மற்றும் மண் கொட்டப்பட்டு தான் இருக்கிறது. அவ்வாறு 3 1/2 அடி உயரத்திற்கு கொட்டிய கற்கள் மற்றும் மணல் பிற்காலத்தில் சமமாகிறதாக வழக்கில் வாதுரையில் மாற்றம் செய்ய மனு ஏதேனும் தாக்கல் செய்திருந்தேனா எனறால் இல்லை, அதற்காக அவசியம் ஏற்படவில்லை. வழக்கு மேல் முறையீடு முடிந்து தற்போது கற்கள் மற்றும் மண்ணை அகற்றுவதற்காக தான் இந்த நிறைவேற்று மனுவை தாக்கல் செய்துள்ளோம். நான் எனது வாதுரையோ அல்லது வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பாணையோ மாற்றம் செய்ய கோரி ஏதேனும் மனு தாக்கல் செய்திருந்தேனா என்றால் இல்லை அகற்றுவதற்காக நிறைவேற்று மனு மட்டும் தாக்கல் செய்திருந்தேன். கற்கள் மற்றும் மணல் கொட்டி அதுசமமான விபரத்தினை இந்த நிறைவேற்று மனுவில் நான் கூறவில்லை என்றால் கூறப்பட்டுள்ளது. என் வீட்டிற்கு வைத்துள்ள கதவை மேற்கு பக்கமாக திறந்து உள்ளே

மற்றும் வெளியே செல்லமுடியுமா என்றால்  கதவு திறக்கமுடியாது.  அந்த கதவை மேற்கு பக்கமா திறந்து மேலே இரண்டு படிகளை கட்டி அமைத்து எளிதா உள்ளே மற்றும் வெளியே சென்று வரமுடியும் என்றால்  சரியல்ல.  சரிவு தளமாக பேட்டால் உள்ளே மற்றும் வெளியே சென்று வரமுடியும் என்றால் சரியல்ல.   வீட்டிற்கு வடக்கு பக்கம் வெளியே சென்றுவர வழி உள்ளது என்றால் சரியல்ல அது எனக்கு பாத்தியப்பட்ட சொத்து அல்ல, என் தம்பிக்கு பாத்தியப்பட்ட சொத்து.  வடக்கு பக்கம் உள்ள சொத்து என் தம்பிக்கு பாத்தியப்பட்ட சொத்து என் வழக்குரையில் கூறவில்லை என்றால் சரிதான். அந்த பாதையில் 31/'2 உயரத்திற்கு கற்கள் மற்றும் மண் இல்லை என்றாலும், நான் இந்த நிறைவேற்று மனுவின்மூலம் நிலத்தினை தோண்டி எடுத்தால் நான் உட்டப அனைவருக்கும் பாதிக்கும் என்றால் சரியல்ல,. 31/2 உயரத்திற்குள் கற்கள் மற்றும் மண் போடப்பட்டுள்ள காரணத்தினால் தான் மழைநீா அங்கு தேங்கியுள்ளது.  நான் தாக்கல் செய்துள்ள இந்த நிறைவேற்று மனுவில் என் வீட்டில் தேங்கியுள்ள தண்ணீரை அகற்றகோரி ஏதேனும் பரிகாரம் வேண்டியுள்ளேனா என்றால் இல்லை.  முதலாவது நீதிமன்றத்தின் தீா்ப்பாணைணில் 6 மாத காலத்திற்குள் தேங்கி நிற்கும் தண்ணீா பிரச்சனை தீா்பபத்ற்கு நகராட்சியிம் அணுக கேதரப்பட்டுள்ளது நான் அவ்வாறு செய்யவில் என்றால் நான் மேல்முறையிடு மனு தாக்கல் செய்திருந்தேன்.   நான் நகராட்சியில் ஏதேனும் மனு தாக்கல் செய்திருந்தேனா என்றால் அதற்கான  அவசியம் எதுவும் ஏற்படவில்லை.  அந்த தீா்ப்பாணையில் 6 மாத காலத்திற்குள் நகராட்சியை அணுகி எந்த நடிவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் எனக்கு பரிகாரங்கள் கிடைக்க தக்கதல் என்று ஆணையிடப்பட்டிருந்தால் என்றால் சரியல்ல அதற்கு எதிராக தான் மேல்முறையீடு செய்யப்பட்டிருந்தது.  நானும் தீா்ப்பாணைக்கு எதிராக மேல்முறையீடு செய்திருந்தேன்.     நான் தாக்கல் செய்துள்ள மேல்முறையீட்டிலும் நகராட்சியிடம் மனு ஏதும் தாக்கல் செய்யவில்லை என்ற விபரத்தினை கூறவில்லை என்றால் சரிதான்.  நான் பாதையை தோண்டி யாருக்கும் பயன்படாமல் இருக்கவேண்டும் என்ற நோக்கத்தில் தான் இந்த நிறைவேற்று மனுவை தாக்கல் செய்திருந்தேன் என்றால்சரியல்ல.  தற்போதும்

3 1/2 உயரத்தில் உள்ள கற்கள் மற்றும் மண் நீக்கவில்லை என்றால் எங்கள் வீட்டிற்கு பாதகம் ஏற்படும். எ ன் வீட்டிற்கு மேற்கு பக்கமாக கதவு திறந்து படிகள் அமைத்து சென்று வரலாம் என்றாலும், நான் நிறைவேற்று மனுவின் எதிர்மனுதாரருக்கு பாதிப்பு விளைவிக்கவேண்டும் என்ற நோக்கத்தில் தான் இந்த நிறைவேற்று மனுவை தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

ம.சா.ஆ-1 ஆவணத்தில் உள்ள புகைப்படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு கற்கள் மண் அ.வ.எண்.8/18ல் தீர்ப்பாணை வழங்கிய பின்னர் 45 நாட்கள் அவகாசம் எதிர்மனுதாரர்கள் மேல்முறையீடு செய்வறதக்கா கொடுக்கப்படடிருந்து. அந்த காலம் முடிவடைந்தஉடன் தீர்ப்பு கடனாளி கற்கள் மற்றும் மணலை பாதையில் கொட்டிவிட்டார்.

<u>ம.விக்கு குறுக்கு விசாரணை</u>

இந்த நிறைவேற்று மனுவில் கூறப்பட்டுள்ளவாறு கற்கள் மற்றும் மண் நிரூபிக்க வழக்கறிஞர் ஆணையர் நியமிக்க மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், ஏற்கனவே மேல்முறையீட்டு மனுவில் ஆணையர் நியமிக்கப்பட்டுவிட்டார். இந்த நிறைவேற்று மனுவில் வழக்கறிஞர் ஆணையர் நியமனம் கோரி மனு தாக்கல் செய்ய தயாரா என்றால் இல்லை.

குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.